## கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

**விளையாட்டு டிப்ளோமா பாடநெறி - 2024/2025**

*கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் விளையாட்டு டிப்ளோமா பாடநெறியினைப் பயிலுவதற்காக வயது 18-35 (அரசாங்க சேவையில் பணியாற்றுவோரின் வயது 45 வருடங்களை விட மேற்படாது இருத்தல் வேண்டும்) வருடங்களுக்கு இடைப்பட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

1.1 கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் 3 பாடங்களில் திறமைச்சித்திகளைப் பெற்றிருத்தில் வேண்டும்.

மேலும் அவர்,

(அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான கல்லூரி ஒன்றில் ஆகக் குறைந்தது 06 மாத பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

அல்லது

(ஆ) முப்படைகள், பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்புப் பிரிவின் பயிற்சி வழங்கும் நிறுவனமொன்றில், கல்லூரியில் விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

அல்லது

(இ) பாடசாலை விளையாட்டு ஆசிரியராக அல்லது ஆசிரியையாக அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டு நில ஆலோசகராக ஆகக் குறைந்தது 05 வருட அனுபவத்துடன் விளையாட்டுத்துறையில் விசேட ஆற்றல்களை வெளிக்காட்டியிருத்தல்.

அல்லது

(ஈ) யாதேனும் விளையாட்டு தொடர்பாக தேசிய விளையாட்டுக் குழுவொன்றின் அங்கத்தவராக இருக்க வேண்டியதுடன் யாதேனும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியிருத்தல்.

அல்லது

(உ) விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் மாவட்ட மட்டப் போட்டியொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல், அவ்வாறு இல்லாவிடின் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

2. **விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முறை:-**

2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் 8" × 13 ½" அளவுடைய கடதாசியில் தயாரிப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்தினால் பூர்த்தி செய்து 2023.10.31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் “பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இலக்கம் 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07” என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறி – 2024/2025” தொடர்பான விண்ணப்பப்படிவம் எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

2.3 அரசாங்க, உள்ளூராட்சி சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. **தேர்ந்தெடுக்கும் முறை:**

இப்பாடநெறி தொடர்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைவரும் எழுத்து மூலப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்புக் குழுவினால் தீர்மானிக்கப்படும் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கும், உடற் தகைமை காண் செயன்முறைப் பரீட்சை ஒன்றுக்கும் அழைக்கப்பட்டதன் பின்னர் பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்படுவர்.

4. **பாடநெறி தொடர்பான விபரங்கள் :**

4.1 பாடத்திட்டமானது கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு 05 பிரிவுகளை உள்ளடக்கியதாகும்:-

(அ) பயிற்றுவித்தலின் பொதுக் கோட்பாடுகள்

உடற் தகைமைகள் மற்றும் திறன்கள், நுட்பமுறைகள், உபாய வழிகள், பயிற்சி முறைகள், திட்டமிடல் முறைகள், பயிற்சிச் சுமை மற்றும் பரீட்சித்தல் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் வாய்மொழி மூலப் பரீட்சை என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

(ஆ) ஆகக்குறைந்தது 10 விளையாட்டுக்கள் தொடர்பான கோட்பாட்டு மற்றும் செயன்முறை அறிவு.

(இ) சுவட்டு மற்றும் மைதான மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் பற்றிய நிபுணத்துவம்.

(ஈ) சுவட்டு மைதான மெய்வல்லுநர் விளையாட்டுகளுக்கு மேலதிகமாக விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறிக்காலத்தின் போது பெண்களின் அல்லது ஆண்களின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் தெரிவுசெய்து கொள்ளும் ஒரு விளையாட்டு தொடர்பான நிபுணத்துவம்.

(உ) விளையாட்டு உடற் கூற்றியல், விளையாட்டுச் சமூகவியல், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டுப் புள்ளிவிபரவியல், விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்யும் முறைகள், விளையாட்டு மருத்துவவியல், விளையாட்டு உயிரி இரசாயனவியல், விளையாட்டுப் போசணை மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் தொடர்பான அறிவு.

4.2 பாடநெறியின் கால எல்லை 12 மாதங்களாகும்.

4.3 இப்பாடநெறியின் பொருட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களால் ரூபா 60,000.00 ஐ பாடநெறிக்கான கட்டணமாக பாடநெறியானது ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியதுடன் பாடநெறிக்கான கட்டணத்தினை செலுத்தி நிறைவு செய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளப்படுவர். அவ்வாறே இப்பணமானது காசோலையாக செலுத்தப்படுமாயின் “செயலாளர், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சகம், உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பிரிவு” எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்படி பணமானது எக்காரணங்கொண்டும் மீள அளிக்கப்பட மாட்டாது.

4.4 பாடநெறியினைப் பயிலுவதற்குத் தெரிவு செய்யப்படுவோர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சட்டதிட்டங்களையும் பிரமாணங்களையும் கடைப்பிடிப்பதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

4.5 பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு “விளையாட்டு டிப்ளோமா” சான்றிதழ் வழங்கப்படும்.

5. **ஏனைய நிபந்தனைகள்:**

5.1 பாடநெறியின் முடிவில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு இவ் அமைச்சு பணிக்கப்படவில்லை.

5.2 இருப்பினும் பாடநெறியினைப் பயில்பவர்கள் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டுமென இவ் அமைச்சு கருதும் பட்சத்தில் அவ்வுடன்படிக்கைக்கு உடன்படுவதற்கு பாடநெறியைப் பயிலுபவர்கள் கட்டுப்படல் வேண்டும்.

5.3 தற்போதுள்ள உயர் தகைமையினை அல்லது கோரப்பட்டுள்ள தகைமையினை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டியதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படாத தரவுகள் பின்னர் முன்வைக்கப்படினும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5.4 இங்கு குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் இருக்குமாயின் அவைதொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனப் பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்.

இல. 100/7, சுதந்திர மாவத்தை,
கொழும்பு 7,
2023, செத்தெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்